அறிந்தேற்பு : 341/1980

தோற்றம் : 1971

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

**(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt. 22-03-1980)**

**TAMILNADU GOVERNMENT COLLEGIATE TEACHERS' ASSOCIATION**

TNGCTA

பேரா. நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. **Ph : 28516573, Telefax : 28414354**

**முனைவர் த. வீரமணி**
தலைவர்

**முனைவர் இரா. தாமோதரன்**
பொதுச்செயலர்

**முனைவர். ஆ. கோபாலகிருஷ்ணன்**
பொருளர்

**முனைவர் க. இரமேஷ்**
துணைத்தலைவர் (பொது)

**பேரா சோ. சுரேஷ்**
இணைச்செயலர் (பொது)

**முனைவர் உ. சிவப்பிரியா**
துணைத்தலைவர் (மகளிர்)

**பேரா. த. மதுரம்**
இணைச்செயலர் (மகளிர்)

சுற்றறிக்கை எண். 02/2018 நாள் : 20.09.2018

**அன்பிற்கினிய தோழர்களே! தோழியரே! வணக்கம்**

தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் பாரம்பரியமிக்க, உறுப்பினர்களின் நலன் காக்க உருவாகிய பெருமைமிகு அமைப்பு ஆகும். இவ்வமைப்பின் மாநில ஆட்சிக் குழு அல்லும் பகலும் அயராது உழைத்திட உறுதுணையாக உள்ள ஆற்றல் மிக்க தோழர்களையும், கழகத்தின் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, சுயநல நோக்கில் தவறும் செய்துவிட்டு, கடும் சொல்லால் மாநில ஆட்சிக் குழுவை விமர்சிக்கும் தோழர்களையும் சமநிலையில் வைத்து, அனைவரின் உரிமைகளையும், நலன்களையும் காத்திட ஆத்மார்த்தமான உணர்வுடன் செயல்பட்டு வருகிறது. கடந்த மாநிலச் செயற்குழுவில் (31.03.2018 சிவகாசி) உறுதியளிக்கப்பட்ட வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றிய பெருமையுடனும், கடந்த செயற்குழுக்குப்பின் சுற்றறிக்கையே இல்லாமல் புலனம் மூலம் மட்டுமே பல போராட்ட தகவல்களையும், போராட்டங்களின் வெற்றிகளையும் உறுப்பினர்களிடம் பரிமாறிக்கொண்டதற்கான வருத்தத்துடனும், நீண்ட நாட்களுக்குப் பிறகு வெளிவரும் இச் சுற்றறிக்கையுடன் உங்களைச் சந்திக்கிறேன்.

**மாநிலச் செயற்குழு கூட்டம்**

கடந்த 26.8.2018 ஞாயிறன்று, மாநிலச் செயற்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கல்லூரியில் நடைபெற்றது. இச்செயற்குழு தவிர்க்க இயலாத காரணங்களால் இருமுறை ஒத்திவைக்கப்பட்டு பின்னர் மேற்குறிப்பிட்ட தேதியில் நடைபெற்றது.

**வரவேற்புரை**

கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கல்லூரி கிளைச்செயலர் முனைவர் மு. சரவணன் அவர்கள் மாநில மண்டல, கிளைப் பொறுப்பாளர்களையும் மற்றும் பார்வையாளர்களையும் வரவேற்றுப் பேசினார்.

**இரங்கல் தீர்மானம்**

கூட்டத்தின் முதல் நிகழ்வாக இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி, முன்னாள் பாரதப் பிரதமர் திரு.அடல் பிகாரி வாஜ்பாய் மற்றும் முன்னாள் மக்களவைத் தலைவர் திரு.சோம்நாத் சார்டர்ஜி ஆகியோரின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது கழக உறுப்பினர்கள், சேலம் மண்டலத் தலைவர், நாமக்கல் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ந.பழநிவேலு அவர்களின் மறைவிற்கும், தஞ்சை மன்னர் சரபோஜி அரசு கல்லூரி ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் என். சாமிநாதன் அவர்கள் மறைவிற்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்**

வேலூர் மண்டலத்தின் சார்பாக இரு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. ஆயினும் அத்தீர்மானங்கள் மண்டலக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகக் குறிப்பிடப்படவில்லை எனக்கூறி தலைவர் மறுத்ததையடுத்து மாநில செயற்குழு நடைபெற்ற அன்று காலை கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கல்லூரியில் மண்டலச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றதாக ஒரு கடிதம் கொடுக்கப்பட்டது. அவ்விரு தீர்மானங்களும் (1. State EC வாட்ஸ்அப் குழுவிலிருந்து விஜயன் அவர்களை மீண்டும் இணைக்கக் கோருதல், 2. கோவை மண்டலச் செயலர் மற்றும் மாநில பொறுப்பாளர்களை விஜயன் அவர்கள் வாட்ஸ்அப்பில் அவதூறாக விமர்சித்தது குறித்து ஆட்சிக்குழு விளக்கம் கேட்டது தவறு என்றும் அது தொடர்பாக விவாதிக்க வேண்டும்) உறுப்பினர்களின் பொதுநலன் தொடர்பாக இல்லை எனவும் இருப்பினும் இதை 'பிற' எனும்

தலைப்பில் எடுத்துப் பேசலாம் எனவும் தலைவர் கூறியதை வேலூர் மண்டலப் பொறுப்பாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் வேலூர் மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மண்டலம் சார்ந்த சில கிளைப்பொறுப்பாளர்கள் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்வதாக அறிவித்து வெளியில் செல்லும் போது வேலூர் மண்டலச் செயலர் விஜயன் அவர்கள் மாநில ஆட்சிக்குழுவின் ரௌடித்தனம் ஒழிக என கோஷமிட்டுச் சென்றார். இதனால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. வெளிநடப்பு செய்வது ஜனநாயக உரிமை எனவும் மாநில ஆட்சிக்குழுவை தவறாக பேசியதற்காக அவர் வருத்தம் தெரிவிக்கவேண்டும் எனவும், அதுவரை அவர் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார் எனவும் அறிவித்ததையடுத்து சலசலப்பு அடங்கி கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

புதுக்கோட்டை மா.மன்னர் கல்லூரி கிளைத் தலைவர் அவர்கள் 10 ஆண்டுகள் நிலுவையில் உள்ள அரசு கல்லூரி ஆசிரியர்களின் முந்தைய பணிக்காலத்தை பணிமேம்பாட்டிற்குக் கணக்கிலெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையின் நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில ஆட்சிக்குழு உறுதியளித்ததையடுத்து இத்தீர்மானம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

திருவெறும்பூர் கிளைச்செயலரின் சார்பாக கிளையின் இணைச்செயலர், அவர்கள் TNGCTA State EC வாட்ஸ்அப் குழுவை நிர்வாகிகள் மட்டும் பதிவிடும் குழுவாக மாற்றியதை எதிர்த்தும் முன்பு போல் ‘அனைத்து உறுப்பினர்களும் பதிவிடும் குழுவாக அது மாற்றப்பட வேண்டும் எனவும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்’. இக்குழு அனைவரும் பதிவிடும் குழுவாக இருப்பதினால் ஏற்பட்ட இடர்பாடுகளை எடுத்துக் கூறியதோடு தேவைப்படின் அனைவரும் பதிவிடும் குழுவாக வேறு ஒரு குழு இயங்க அனுமதி வழங்கப்படும் என தலைவர் கூறியதை செயற்குழு ஏற்றுக்கொண்டதையடுத்து இத்தீர்மானமும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**தலைவர் உரை**

வலிமையான போராட்டங்களினாலும், மாநில ஆட்சிக் குழுவின் தொடர் நடவடிக்கைகளாலும், இந்தியாவிலேயே 4ஆவது மாநிலமாகவும், பெரிய மாநிலங்களில் முதல் மாநிலமாகவும், ஏழாவது ஊதியக்குழு உள்ளிட்ட பல அரசாணைகளை பெற்றதை விளக்கமாக கூறியதோடு இவற்றை பெறுவதற்கு காரணமாயிருந்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர். உயர்கல்வித்துறைச் செயலர், கல்லூரி கல்வி இயக்குனர் ஆகியோருக்கும் மாநிலத் தலைவர் நன்றி தெரிவித்தார். இயக்கம் வலிமையான போராட்டங்கள் மூலமாகவே கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் எனவும் வலியுறுத்தினார்.

**பொதுச்செயலர் உரை**

ஏழாவது ஊதியக்குழு அரசாணையைப் பெறும்போது ஏற்பட்ட சிக்கல்கள் குறித்தும் அரசாணைகள் 101, 102 ஆகியவற்றின் குறைபாடுகள் குறித்தும் விளக்கமான உரையாற்றிய பொதுச்செயலர், UGC-இன் 2018 நெறிமுறைகள் அரசாணையாக வரும்போது 6000-7000, 7000-8000 தரவூதியங்கள் பெறுவது எளிதாகும் எனவும், 2018 UGC நெறிமுறைகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டால் மட்டுமே MPhil, PhD -க்கான ஊக்க ஊதிய உயர்வுகள் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பேராசிரியர் பதவிகள் கிடைக்கும் என்பதையும் தெரிவித்தார்.

மேலும், தொடர்ந்து வரும் முறையற்ற பணியிட மாறுதல்கள் குறித்தும் இதில் நமது சில உறுப்பினர்களே ஈடுபடுவது குறித்தும் தனது வருத்தத்தைப் பதிவு செய்தார்.

**அய்பெக்டோ தேசியக் கருத்தரங்கம் மற்றும் நமது கழக மாநில மாநாடு**

அய்பெக்டோவின் தேசிய கருத்தரங்கம் JAC சார்பாக கன்னியாகுமரியில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கத்தின் கூடுதல் செலவினங்களை JAC -இன் அங்கங்களான AUT 30 சதவீதமும், MUTA 30 சதவீதமும், TNGCTA 40 சதவீதமும் பகிர்ந்து கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. நமது கழகத்தில் மாநில மாநாடு கோவையில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக விளக்கமளித்த மாநிலப் பொருளர், இந்த ஆட்சிக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் 2019-இல் முடிவடைவதால் வரும் சனவரி 2019 முதல் கிளைத் தேர்தல்களை நடத்த வேண்டியுள்ளதால், சிவகாசி செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டபடி 2017 - 18 ஆண்டு சந்தா ரூ.500/- மற்றும் 2018-19 ஆண்டு சந்தா ரூ.1000/- ஆகியவற்றை வசூலித்து, அதிலிருந்து மண்டல சந்தா 100 + 200 = 300/- மாநில சந்தா 200 + 400 = 600/- ஆகியவற்றை மண்டல மற்றும் மாநில பொருளரிடம் செலுத்தி உறுப்பினர் பட்டியலைத் தயார் செய்து பொதுச்செயலருக்கு அனுப்பவேண்டுமெனவும், இத்தொகை செலுத்தியதற்கான வங்கி ரசீதை tngctasubscriptions@gmail.com என்ற இமெயில் முகவரிக்கு அனுப்பி வைத்தால், உடனடியாக மாநில சந்தாவுக்கு உரிய ரசீது அனுப்பி வைக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

மாநில மாநாட்டுக்கெனவும் அய்பெக்டோ தேசியக் கருத்தரங்கத்திற்கெனவும் மொத்தமாக ரூ.1000/- கருத்தரங்க நிதியாக வசூல் செய்து அதற்கென உள்ள தனிக்கணக்கில் செலுத்த வேண்டுமெனவும் இது அனைத்து உறுப்பினர்களுக்கான நிதியாகும் எனவும் தெரிவித்தார். இது தவிர மாநில மாநாட்டு கருத்தரங்கில் பங்கு பெறும் உறுப்பினர்கள் பேராளர் கட்டணமாக ரூ.250/- செலுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**குடும்ப நல நிதி**

நமது கழகத்தின் உறுப்பினர்களுக்கான குடும்ப நல நிதியாக ரூபாய் ஆறு லட்சம் வங்கிக் கணக்கில் நிரந்தர வைப்புத்தொகையாக உள்ளது. இதுவரை நமது கழகத்திற்கு PAN அட்டை பெறப்படாததால் இந்நிதி நாம் பயன்படுத்த

முடியாத நிலையில் இருந்தது. தற்போது PAN அட்டை பெறப்பட்டுவிட்டதால் இந்நிதியை நாம் பயன்படுத்த இயலும். இது தொடர்பாக விளக்கமளித்த மாநிலத் துணைத்தலைவர் க.இரமேஷ் அவர்கள் சிவகாசி செயற்குழுவில் தீர்மானித்தபடி பல காப்பீடு நிறுவனங்களிடம் விசாரித்துப் பெற்ற விவரங்களின்படி இறப்புக்கு மட்டும் பலனளிக்கும் காப்பீட்டு திட்டங்களால் நாம் பெறும் தொகையை விட நாம் செலுத்தும் தொகை கூடுதலாக இருக்கிறது எனவும், Survivel benefit உடன் கூடிய திட்டங்கள் பெரும்பாலும் சாதாரண காப்பீடு திட்டங்களாகவே உள்ளதாக தெரிவித்ததையடுத்து இவைகள் தேவையில்லை என செயற்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். இருப்பினும் பணிக்காலத்தில் இறக்கும் நமது கழக தோழர்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் நமது கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ரூ.1000/- Corpus Fund ஆக ஒருமுறை செலுத்த வேண்டும் எனவும் இத்தொகை நிரந்தர வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு இதன் வட்டித் தொகையிலிருந்து உறுப்பினர்களின் குடும்பத்தாருக்கு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.100/- குடும்பநல நிதியாக வழங்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த 2018-19 ஆண்டுக்கான குடும்ப நலநிதி ரூ. 1100/- ஆகும்.

**ஜேக்டோ ஜியோ போராட்டங்கள்**

ஜேக்டோ ஜியோ போராட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்த நமது கழகத்தின் மாநில இணைச்செயலர் சுரேஷ் அவர்கள் ஜேக்டோ ஜியோவின் வலிமையான போராட்டத்தாலேயே தமிழக அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு 7வது ஊதியக்குழு அமல்படுத்தப்பட்டது எனவும் இதன் காரணமாகவே நமக்கும் UGC - ன் ஏழாவது ஊதியக்குழு அமல்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்தார். தற்போது ஜேக்டோ ஜியோ அறிவித்துள்ள ஆர்ப்பாட்டம் (30.8.18), ஒருநாள் ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு (4.10.18) மற்றும் 27.11.18 முதல் நடைபெறும் தொடர் வேலை நிறுத்தம் ஆகிய போராட்டங்களில் ஈடுபாட்டுடன் பங்கெடுக்க வேண்டுமெனவும், இதன் மூலமாகவே நாம் பழைய ஓய்வூதியத் திட்டத்தை பெறமுடியும் எனத் தெரிவித்தார்.

**அய்பக்டோ தேசிய செயற்குழு**

அய்பக்டோ மகளிரணி தொடங்குவது தொடர்பாக கடந்த 19.8.2018 அன்று கொல்கத்தாவில் நடைபெற்ற அய்பெக்டோ தேசிய செயற்குழுவில் மாநில மகளிர் பொறுப்பாளர்கள் முனைவர் ர. சிவப்பிரியா ம;ற்றும் முனைவர் த. மதுரம் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் அய்பெக்டோ மகளிரணி அமைப்பது தொடர்பாகவும் அவ்வணியின் செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. நமது TNGCTA ல் மாநில மண்ட ம;ற்றும் கிளைப் பொறுப்புகளில் மகளிரின் பணி ஏற்கெனவே உள்ளது என்பது நமது பொறுப்பாளர்களால் விவரிக்கப்பட்டது. இதனை அய்பக்டோ பொறுப்பாளர்கள் வெகுவாகப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது என மாநிலத் துணைத்தலைவர் உ. சிவப்ரியா அவர்கள் தெரிவித்தார்.

**மாநிலச் செயற்குழுக் கூட்ட தீர்மானங்கள்**

செயற்குழுக் கூட்டத்தின் இறுதியாக கீழ்க்காணும் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

தமிழக மேனாள் முதல்வர் கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்கள், மேனாள் பாரதப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள், மேனாள் மக்களவைத் தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் ஆகியோரின் மறைவிற்கு இந்த மாநிலச் செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறது.

தமது கழகத்தின் சேலம் மண்டலத் தலைவர் முனைவர் த.பழனிவேலு, தஞ்சை மன்னர் சரபோஜி கல்லூரி ஆங்கில உதவிப் பேராசிரியர் சாமிநாதன் மேலும் ஆகியோரின் அகால மரணத்திற்கு மாநிலச் செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து கொள்கிறது.

1. தமிழகத்திலுள்ள கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு யூஜிசி - யின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைகளை அமல்படுத்திய **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள், **மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்** அவர்கள், மதிப்பிற்குரிய உயர்கல்வித்துறை செயலர் மற்றும் கல்லூரி கல்வி இயக்குநர் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை (CPS) இரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.
3. யூஜிசி-யின் ஏழாவது ஊதியக்குழுவின் பணிவரன் நெறிமுறைகளை அரசாணையாக உடனடியாக வெளியிட வேண்டுமென மாநிலச் செயற்குழு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.
4. அரசாணை எண் 101 மற்றும் எண் 102-இல் உள்ள குறைபாடுகளைக் களைந்து பணிமேம்பாடு ரூபாய் 6000 - 7000 மற்றும் ரூபாய் 7000 - 8000 தரஊதியம் வழங்கப்பட வேண்டுமெனவும் அதற்குரிய நிலுவைத் தொகையினை விரைவாக வழங்கவேண்டுமெனவும் மாநிலச் செயற்குழு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.
5. ஆண்டு முழுவதும் முறையற்ற வகையில் நடைபெற்ற அனைத்து பணியிட மாறுதல்களும் உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும்.
6. கிராமப்புறக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் நலன் கருதி அனைத்து அரசு கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.
7. தமிழக அரசால் புதிதாகத் தொடங்கப்பட்ட கல்லூரிகளுக்கும் மற்றும் புதிதாக தொடங்கப்பட்ட பாடப்பிரிவுகளுக்கும் உரிய காலிப்பணியிடங்கள் உட்பட சுமார் 4000 ஆசிரியர் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கு அரசாணை வெளியிடப்பட வேண்டுமென மாநிலச் செயற்குழு தமிழக அரசை கேட்டுக்கொள்கிறது.

8. சட்டமன்றத்தில் விதி 110-இன் கீழ் 41 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் அரசு கல்லூரிகளாக மாற்றப்படும் என அறிவித்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் **மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்** ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதோடு அதற்கான அரசாணையை விரைந்து வெளியிட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறது.
9. கல்லூரி ஆசிரியர்களின் பணி ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தி ஆணை வழங்கிட வேண்டும்.
10. 1.01.2004 -க்கு பிறகு பணியில் சேர்ந்த கல்லூரி ஆசிரியர்களுக்கு மத்திய அரசு அறிவித்துள்ள பணிக் கொடையை (DCRG) வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
11. ஏழாவது ஊதியக்குழுவின் 1.1.16 முதல் 30.9.17 வரையான 21 மாத நிலுவைத்தொகையை உடன் வழங்க வேண்டும்.
12. தமிழ் மற்றும் கணினி பாடத்திற்குப் புத்தாக்கப் பயிற்சிகள் நடத்த ஆவன செய்ய வேண்டும்.
13. முந்தைய பணிக்காலத்தை பணிமேம்பாட்டிற்குக் கணக்கிலெடுக்க வேண்டும்.
14. 7000-8000 பணிமேம்பாடு வழங்க கல்லூரி முதல்வருக்கு அனுமதி அளிக்க வேண்டும்.
15. 2015 TRB ஆசிரியர்களுக்கான முழுத்தகுதிச் சான்றிதழ், பணிவரன்முறை ஆணை மற்றும் தகுதிகாண் பருவம் நிறைவு ஆணை ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.
16. 1998 மற்றும் அதற்குப் பிந்தைய TRB ஆசிரியர்களுக்குப் பணி மூப்புப் பட்டியலை வெளியிட வேண்டும்.
17 2018 டிசம்பருக்குள் அனைத்துப் பாடங்களுக்கும் தேவையான அளவு புத்தாக்கப் பயிற்சிகளை நடத்திட வேண்டும்.
18. கல்லூரிக்கல்வி இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர்களைப் பணிமூப்பு அடிப்படையில் நியமித்திட வேண்டும்.
19. 20.2.13 - 21.2.13, 22.02.17 ஆகிய வேலை நிறுத்த நாட்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும்.
20. அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகைப் பேராசிரியர்களை மூன்று ஆண்டு அயற்பணிக்காலம் முடிந்தவுடன் திரும்ப அனுப்ப வேண்டும்.
21. 2007 க்குப் பின்னர் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு இணைப்பேராசிரியர் பதவி உரிய காலத்தில் வழங்க வேண்டும்.
22. கல்லூரி ஆசிரியர்களுக்குப் பேராசிரியர் பதவி உயர்வு காலமுறைப்படி வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
23. முறையற்ற வகையில் பணியிட மாறுதல் பெற்ற நமது உறுப்பினர்களிடம் விளக்கம் பெற்று மாநிலத் தலைமைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.
24. மாநில செயற்குழு கூட்டத்தில் ஆட்சிக்குழுவை அநாகரீகமாக விமர்சித்து முழக்கம் எழுப்பிய வேலூர் மண்டலச் செயலர் திரு விஜயன் அவர்களை இச் செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இயக்க நடவடிக்கைகளை சீர்படுத்துவதற்காக வேலூர் மண்டலத்திலுள்ள கிளைகளுக்கு நேரில் சென்று பொறுப்பாளர்களையும், உறுப்பினர்களையும் சந்திப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.
25. கரூர் அரசு கலைக் கல்லூரி இயற்பியல் துறைத் தலைவர் பேரா சிவகாமி அவர்களின் செயல்பாடுகளால் அத்துறையிலுள்ள அனைத்து ஆசிரியர்களும் மனவுளைச்சலுக்கு உள்ளாகிறார்கள். அவரை பணியிடம் மாறுதல் செய்து ஆசிரியர்களின் நலன் காக்க வேண்டுமென கல்லூரி கல்வி இயக்குநரை செயற்குழு கேட்டுக்கொள்கிறது.
26. நமது கழகத்தில் மாநில மாநாடு கோவையில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
27. மாநில மாநாடு மற்றும் அய்பெக்டோ மாநாட்டுக்கென ரூபாய் 1000/- உறுப்பினர் நிதியாகவும், மாநில மாநாட்டில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு ரூ.250/- பேராளர் கட்டணமாகவும் வசூலிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
28. உறுப்பினர் குடும்ப நல நிதிக்கென ரூ.1000/- ஒரு முறை செலுத்தும் நிதியாக வழங்குவது எனவும், பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ரு.100/- குடும்ப நல நிதியாக வழங்க வேண்டும் எனவும், இத்திட்டத்திலிருந்து ஒரு அறக்கட்டளை நிறுவுவது எனவும், பணிக் காலத்தில் மரணமடையும் நமது உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ரூ.1,00,000/- வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**பணியிடைமாற்ற கலந்தாய்வு:**

TNGCTA மாநில ஆட்சிக்குழுவின் தொடர் வலியுறுத்தலின் காரணமாகவே நீண்ட நாட்களாக காலம் தாழ்த்தப்பட்டு வந்த பணியிடமாறுதல் கலந்தாய்வு, செப்டம்பர் 10, 11 மற்றும் 12 தேதிகளில் சென்னை இராணிமேரி கல்லூரியில் நடத்தப்பட்டது. இக்கலந்தாய்வில் 300க்கும் மேற்பட்ட தோழர்கள், தோழியர்கள் கலந்து கொண்டனர். கலந்தாய்வின் போது பலமுனை அழுத்தங்கள் இருந்தாலும் கூட, TNGCTA மாநில ஆட்சிக் குழுவின் நேர்மையான செயல்பாடுகளாலும், வெளிப்படைத்தன்மையைக் காக்க எடுத்த முயற்சிகளாலும், கல்லூரி கல்வி இயக்குநர் அவர்கள் இந்தக் கலந்தாய்வை சிறப்பாகவும், முடிந்தவரை நேர்மையாகவும் நடத்தினார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறக்குறைய 150-க்கு மேற்பட்ட தோழர்கள், முறையான வகையில் பணியிட மாறுதல் பெற்றுள்ளனர் என்பது பெருமைக்குரியது. இந்நிகழ்வு கழகத்தின் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, முறைகேடாகப் பணியிட மாறுதல் ஆணை பெற்ற பேராசிரியர்களுக்கு அவர்களது தவறை உணர்த்துவதாக இருந்தது என்றால் மிகையாகாது.

**கான முயலெய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது.** - குறள் 772

*ஒன்று படுவோம்!* *போராடுவோம்!* *வெற்றிபெறுவோம்!*

(கையொப்பம்)
பொதுச்செயலர்